# நாதஸ்வர இசையும்!! நையாண்டி மேளமும்!!

இந்திய ஒன்றியப் பகுதியில் விடுதலைக்குப் பின்னர், வடிவமைக்கப்பட்ட அரசியல் சட்டத்தின்படி இன்றுவரை முதல் பொதுத் தேர்தலான 1952 ஆம் ஆண்டு தொடங்கி நடைபெற்ற நாடாளுமன்ற சட்டமன்றங்களின் தேர்தல்களில் வெற்றிபெற்று முறையே ஒன்றியத்திலும், மாநிலங்களிலும் ஆட்சியமைத்த அரசியல் கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளும், மாநிலங்களில் ஆட்சியமைத்த அரசியல் கட்சிகளும், வெற்றி வாய்ப்பை இழந்த எதிர்க் கட்சிகளின் பிரதிநிதி களும் நாடாளுமன்ற சட்டமன்றங்களின் கூட்டத் தொடர்களில் கலந்து கொண்ட விவாதங்களில் ஜனநாயகத்தின் மாண்புகளையும், மரபுகளையும், அடிப்படைப் பண்புகளையும் பேணிப் பாதுகாப்பதிலும், போற்றிவருவதிலும் எந்த அளவிற்கு அக்கறையும் கவனமும் எடுத்துக் கொண்டார்கள் என்பதை கடந்தகால நாடாளுமன்ற சட்டமன்றங்களின் நடவடிக்கைக் குறிப்புகளைத் திருப்பிப் பார்த்தால் அவைகள் கலங்கரை விளக்கமாகவும் குன்றின் மேலிட்ட விளக்காகவும் ஒளிபரப்பிக்கொண்டிருப்பதை இன்றைக்கும் வரலாற்றின் பக்கங்களில் பார்க்கலாம்.

**இதைத்தான் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தம்பி வெற்றி பெறுகிற போது வெறி-யாட்டம் போடாமலும் தோல்வி அடைகிற போது துவண்டு விடாமலும் கடமையாற்றுவதில் ஒரு களிப்பு இருக்கிறது என்று தம்பிகளுக்கு அன்று எழுதிய கடிதங்களில் அடிநாதமாக மக்களாட்சி மாண்புகளை படம்பிடித்துக் காட்டியிருப்பார்.**

அதிலும் குறிப்பாக, தமிழ்நாடு சட்டமன்றத்தினுடைய கடந்தகால நிகழ்ச்சிகள் ஜனநாயக அமைப்புகளுக்கும் மக்களாட்சி நடைமுறைக்கும் வழிகாட்டும் வகையில் அமைந்திருந்தது என்பதற்கு எத்தனையோ சான்றுகளை சொல்லிக்கொண்டே போகலாம். ஆம்! 1967ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் அன்னை தமிழ்நாட்டின் முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்டதற்குப்பிறகு, ஒரு விவாதத்தின்பொழுது அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கருத்திருமன் ஆளுங்கட்சியான தி.மு.கவை பார்த்து "நாடோடிகளெல்லாம் நாடாள வந்திருக்கிறார்கள்" என்று ஏளனமாக பேசினார். அதற்கு எளிமையின் எடுத்துக்காட்டான அடக்கத்தின் அணிகலனாக அமர்ந்திருந்த முதலமைச்சர் அண்ணா அவர்கள் எழுந்து சொன்னார், "நாடாண்டவர்களெல்லாம் நாடோடிகளாகிவிட்டதால், நாடோடிகளாகியிருந்த நாங்கள் நாடாள வந்திருக்கிறோம்" என்று நகைச்சுவையாக குறிப்பிட்டார்! அப்போது சபையில் எழுந்த சிரிப்பொலி பல நிமிடங்கள் நீடித்தது என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

இப்படி அறிவாசான் அண்ணாவின் மறைவிற்குப் பிறகு முத்தமிழறிஞர் கலைஞர் காலத்தில் ஒரு முறை சட்டமன்றத்தில் சட்டப்பேரவை உறுப்பினர் ஹண்டே அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை, "மூன்றாம்தர ஆட்சி" என்று குறிப்பிட்டார். அதற்கு அன்றைய முதல்வராக இருந்த முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்கள் பதற்றப்படாமல் ஹண்டே அவர்களின் விமர்சனத்திற்கு பதிலளிக்கும் முறையில் மாண்புமிகு உறுப்பினர் ஹண்டே அவர்களே"இந்த ஆட்சி மூன்றாம்தர ஆட்சி அல்ல" மாறாக, நான்காம்தர (சூத்திரர்கள்) மக்களால் நடத்தப்படுகின்ற ஆட்சி என்று அறிவுபூர்வமாக பதிலளித்து சட்டமன்றத்தை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார் என்பது வரலாறு. இத்தகைய அறிவுபூர்வமான விவாதங்களை தமிழக சட்டமன்றத்திலே நடத்தி வரலாறு படைத்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகமாகும்.

ஆனால், நடந்துமுடிந்த சட்டமன்ற தொடரில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் செல்வி.ஜெயலலிதா அவர்களை முன்பு அவமானப்படுத்திவிட்டதாக தமிழக வெற்றிக் கழக உறுப்பினர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது குற்றம் சாட்டினார்கள். அன்றையதினம் முத்தமிழறிஞர் கலைஞர் அமைச்சரவையில், நானும் அமைச்சராக இருந்தவன் என்ற முறையிலும் சம்பவங்களை நேரடியாகப் பார்த்தவன் என்ற நிலையிலும் அங்கு நிகழ்ந்த அசம்பாவித சம்பவங்களுக்கும், விரும்பத்தகாத நிகழ்வுகளுக்கும் யார் காரணம் என்பதையும், யார் அந்த விரும்பத்தகாத நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தவர் என்பதையும் அவரது கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் முன்பு அமைச்சராக இருந்த எஸ்.திருநாவுக்கரசு மிகத் தெளிவாக பத்திரிக்கை மற்றும் ஊடகங்கள் மூலம் பொதுவெளியில் விளக்கம் அளித்ததை நாடும் ஏடும் நன்கு அறியும். செல்வி.ஜெயலலிதா தான் அன்றைய நிகழ்வு களுக்கு காரணமானவர் என்பதை அவர் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் கூறியிருக்கிறார்.



**பொன்.முத்துராமலிங்கம்,**
முன்னாள் அமைச்சர்
உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்

இந்த விவரங்களை அறியாத தமிழக வெற்றிக்கழக அமைச்சர்களும், உறுப்பினர்களும் அந்த விளக்கத்தை ஒருமுறை பார்த்து படித்து விட்டு விளக்கம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே எங்களின் விருப்பமாகும். எனவே, அதுகுறித்து தமிழக வெற்றிக்கழக அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் அன்றைய நிகழ்விற்கு யார் காரணம் என்பதை தெளிவாக உணர்ந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

தமிழ்நாட்டில் சமீபத்தில் நடந்த 2026 பொதுத்தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் தனித்து ஆட்சியமைக்கும் தனிப்பெரும்பான்மை என்ற எண்ணிக்கைபலம் இல்லாவிட்டாலும், தி.மு.க தலைமையிலான கூட்டணி யில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கட்சிகளான காங்கிரஸ் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலை சிறுத்தைகள், அகில இந்திய முஸ்லிம் லீக் கட்சி ஆகிய ஐந்து கட்சிகளின் துணையோடு பொய்க்கால் குதிரையாகவும், வைக்கோல் கன்று குட்டியைக் காட்டி பசுவிடம் பால் கரப்பதை போல, தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய் ஆட்சி அமைக்கும் வாய்ப்பினைப் பெற்று முதலமைச்சராகப் பொறுப்பேற்று நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து அதன்மீதான வாதப்பிரதி வாதங்களை தொடங்கி வைத்திருக்கிறார். அதன்பிறகு துறைசார்ந்த மானியக் கோரிக்கைகள்மீது விவாதங்கள் நடைபெற்றதையும், அவற்றை நேரடியாக ஒளிபரப்பு செய்ததையும் கூர்ந்து கவனித்தால், அவைகள் முறையாகவும், நடுநிலையோடும் நடைபெற்றதாகத் தெரியவில்லை

**சட்டமன்ற நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியவிதம் பிரதான எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் என்ன பேசுகிறார்கள்? எப்படி நடந்து கொண்டார்கள்? என்பதை மட்டும் மக்களுக்கு ஒளிபரப்பினார்களே அல்லாமல் ஆளுங்கட்சியிலே உள்ள அமைச்சர்களும் மற்றைய சட்டமன்ற உறுப்பினர்களும் எப்படி நடந்து கொள்கி றார்கள்? என்பதை திட்டமிட்டு ஒளிபரப்பவில்லை. இதன்மூலம், பிரதான எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் தேவையில்லாமல் அத்துமீறிய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற தோற்றத்தை மக்கள் மத்தியில் உருவாக்குவதற்காகத்தான் இத்தகைய போக்கை திட்டமிட்டு செய்திருக்கிறார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி என தெளிவாகிறது.**

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கேள்விகளுக்கும், ஐயப்பாட்டிற்கும் அமைச்சர் பெருமக்கள் விளக்கமளிக்க வேண்டிய ஜனநாயகக் கடமையை சரிவரச் செய்யவில்லை என்பதோடு, முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் (07.09.2026) திங்கட்கிழமை பதிலளித்தார். தன்னுடைய பதிலுரை எப்படி இருக்கும் என்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பே, முதலமைச்சர் கட்டியம் கூறும் வகையில் தான் திங்கள்கிழமை எதிர்க் கட்சிகளின் கேள்விகளுக்கு பதிலளிக்க போவதாகவும், தற்போது எதிர்க்கட்சிகளில் உள்ள உறுப்பினர்கள் யாரும் ஓடிவிட வேண்டாம் என்று உடல்மொழியுடன்கூடிய கட்டியம் கூறினார் என்பதோடு அது ஒரு முதலமைச்சர் செய்வதற்குரிய காரியங்கள் அல்ல என்பதுமாகும்.

> **சர்க்காரியா கமிஷன் அறிக்கைப்பற்றி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்ன விமர்சனம் சொன்னார் என்பதை இங்கு சுட்டிக் காட்டுவது சாலப் பொருத்தம் மட்டுமல்ல, காலப் பொருத்தமாகவும் இருக்கும் என்று கருதுகிறேன். சர்க்காரியா கமிஷன் அறிக்கையைப் படித்து ஆய்வுசெய்த கலைஞர் சர்க்காரியா கமிஷன் அறிக்கைப் பற்றி பொதுவெளியில் கூறும்பொழுது "பார்த்தேன்! படித்தேன்! ரசித்தேன்! என்று முத்தாய்ப்பாய்க் கூறினார்". முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்ன இந்தக் கருத்து சர்க்காரியா கமிஷன் அறிக்கைக்கு அடித்த சாவு மணியாகும் என்பதே சரியான விமர்சனமாகும்.**

இதனைத் தொடர்ந்தும் எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு பதிலளித்த முதலமைச்சர் ஜோசப் விஜய் உரியவகையில் பதில்களை அவையில் முன்வைக்காமல், எந்த வகையிலும் தொடர்பில்லாத முடிந்துபோன சர்க்காரியா கமிஷன் அறிக்கைப்பற்றி விளாவாரியாக பேசியுள்ளார். ஆனால், சர்க்காரியா கமிஷன் அறிக்கையின் அடிப்படையில் எந்தக் குற்ற நடவடிக்கையும் எடுக்க வேண்டிய அவசியமில்லை என்று அன்றைய தமிழக அரசின் தலைமை வழக்கறிஞரான வி.பி.ராமன் அவர்களும் ஏனைய சட்டவல்லுநர்களும் சொன்ன கருத்துக்களின்படி, அந்தக் கோப்பு மேல்நடவடிக்கைக்கு உகந்ததல்ல என்று கிடப்பில் போடப்பட்டதை உலகம் அறியும்.

சர்க்காரியா கமிஷன் அறிக்கைப்பற்றி முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்கள் என்ன விமர்சனம் சொன்னார் என்பதை இங்கு சுட்டிக்காட்டுவது சாலப் பொருத்தம் மட்டுமல்ல, காலப் பொருத்தமாகவும் இருக்கும் என்று கருதுகிறேன். சர்க்காரியா கமிஷன் அறிக்கையைப் படித்து ஆய்வுசெய்த கலைஞர் சர்க்காரியா கமிஷன் அறிக்கைப்பற்றி பொதுவெளியில் கூறும்பொழுது "பார்த்தேன்! படித்தேன்! ரசித்தேன்! என்று முத்தாய்ப்பாய்க் கூறினார்". முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்ன இந்தக் கருத்து சர்க்காரியா கமிஷன் அறிக்கைக்கு அடித்த சாவு மணியாகும் என்பதே சரியான விமர்சனமாகும்.

எனவே, முடிந்துபோன காலங்கடந்த சர்க்காரியா கமிஷன் பற்றிய சங்கதிகளை தமிழக சட்டமன்றத்தில் முதலமைச்சர் ஜோசப்விஜய் அவர்கள் விளக்கமளிப்பதும், விமர்சனம் செய்திருப்பதும் "பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் கொட்டைப்பாக்குக்கு விலை சொல்வதைப் போல்" உள்ளது. உண்மையில் சட்டமன்றத்தில் ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் உள்ள உறவுகள் மற்றும் விவாதங்களைப்பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிடும்போது (It is not a question of Majority or Minority, It is question of Justice and Equality) என்று அழகாக சொல்வார்கள்.

ஆம்! சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் எண்ணிக்கைகளைப் பார்க்காமல், எண்ணங்களைப் பார்த்து பதிலளிக்க வேண்டிய முதலமைச்சர் சின்னத்திரை மற்றும் வண்ணத்திரை நடிகரைப்போல் உடல்மொழியோடு பதிலளித்திருப்பது தமிழக சட்டசபையின் சரித்திரத்தில் மாறாத வடுவாகி இருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. எனவே, இனிவரும் சட்டமன்ற கூட்டத் தொடர்களிலாவது முதல மைச்சரும், அமைச்சர்களும் திசை திருப்பும் வேலைகளை விட்டு விட்டு, தொடர்பில்லாத சங்கதிகளை "மொட்டைத் தலைக்கும் முழுங்கா லுக்கும் முடிச்சு போடுவதைப் போல" எடுத்துக்காட்டி, பேசி மக்களாட்சியின் மாண்புகளை காயப்படுத்துவதை விட்டு விட்டு சட்டமன்ற மரபுகளை கடைப்பிடித்து காப்பாற்றும் வகையில் உரியமுறையில் பதிலளிக்க கற்றுக்கொண்டு, நல்ல நடைமுறை களை பின்பற்ற வேண்டும் என்று சட்டசபை நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்பில் பார்த்த மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்.

**நாதஸ்வர இசையையும் ரசிக்க முடியும்! நையாண்டி மேள இசையையும் ரசிக்க முடியும்! இந்த இரண்டும் இசைக்கப்பட வேண்டிய இடங்கள் வேறு வேறு ஆகும். மாறாக, இடம்மாற்றி இசைக்கப்படுமேயானால், ராகங்கள் தடம்மாறிபோகும்.**

எனவே, இனிவரும் காலங்களிலாவது ஆளுங் கட்சியைச் சார்ந்த முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களும், அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் சட்டசபை சரித்திரங்களையும், பழைய சம்பவங்களின் குறிப்புகளையும் தெரிந்து கொண்டு சபையில் பேச வேண்டும். அதுதான் அவர்களுக்கும், வாக்களித்த மக்களுக்கும் பெருமை சேர்ப்பதாக இருக்கும்.

---

## தமிழ்நாடு முழுவதும் த.வெ.க. அரசைக் கண்டித்து

# மின்கழக தொ.மு.ச. இன்று ஆர்ப்பாட்டம்!

## பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை!

சென்னை, செப். 11 –

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்யப்பட்ட 9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மின்கழக தொ.மு.ச. வினர் இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர் என்று அதன் பொதுச் செயலாளர் பா.மணிமாறன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை வருமாறு:

தொழிலாளர்களின் விரோத த.வெ.க. அரசைக் கண்டித்து தமிழ்நாடு மின்கழகத் தொ.மு.ச. சார்பாக தமிழ்நாடு முழுவதும் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெறுகிறது.

தமிழ்நாடு முழுவதுமுள்ள மின்வாரிய மேற்பார்வைப் பொறியாளர் அலுவலக முன்பு மற்றும் மின்வாரிய தலைமை அலுவலக முன்பு மின்கழகத் தொ.மு.ச.வினர், மின்வாரியம் தனியார் மயமாவதை ரத்து செய்ய, ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளம் கண்டு பணிநிரந்தரம் என பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று (11.09.2026) மாலை 5.20 மணியளவில் த.வெ.க. அரசை எதிர்த்து



மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

திராவிட மாடல் அரசின் கழகத் தலைவர் அன்புத்தளபதி முதலமைச்சராக பொறுப்பு வகித்து 2021–2026 ஐந்து ஆண்டுகளில், மின்வாரியத்தில் பணிபுரிந்த தொழிலாளர்கள், பொறியாளர்கள், மற்றும் அலுவலர்கள் இழந்த பல சலுகைகளை பெற்றுக்கொடுத்தார்கள். முத்தரப்பு ஒப்பந்தம், 5 ஆண்டுகளில் 2 முறை ஊதிய உயர்வு, ஈட்டிய விடுப்பை பணமாக்கி கொள்ள உத்தரவு, உடனுக்குடன் அகவிலைப்படி உயர்வு, தீபாவளி போனஸ் கருணைத் தொகையுடன், பொங்கல் பரிசு உள்ளிட்ட பல சலுகைகளை வழங்கி மின்வாரியத்தில் பணிபுரிகிறவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தினார்கள்.

ஆனால், த.வெ.க. அரசு பொறுப்பு ஏற்ற 100 நாட்களிலேயே, மின்வாரியத்தில் பணிபுரிகிறவர்கள், எண்ணிலடங்கா பல துயரத்தை சந்தித்துள்ளனர். மின்வெட்டை சரி செய்ய முடியாமலும், அதற்கு தகுந்த காரணம் கூறாமாலும், த.வெ.க. அரசும், மின்துறை அமைச்சர் அவர்களும் தடுமாறுகிறார்கள். எதற்கெடுத்தாலும் கழக அரசின் மீதும் மின்வாரிய பணியாளர்கள் மீதும் பழி சுமத்தி கொண்டிருக்கிறார்கள்.

மின்வாரிய பணியாளர்கள் மீது பழிபோடும் த.வெ.க. அரசையும், மின்துறை அமைச்சர் அவர்களையும் கண்டித்தும் தமிழ்நாடு மின்கழகத் தொ.மு.ச. சார்பாக கீழ்க்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும், மின்வாரிய தலைமை அலுவலகம் முன்பும், அனைத்து மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் முன்பும், இன்று (11.09.2026 – வெள்ளிக்கிழமை) மாலை 5.20 மணியளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

மின்வாரியம் தனியார்மயமாவதை கைவிடுக.

ஒப்பந்த முறையில் 10,000 பேர்களை பணி அமர்த்தப்படுவார்கள் என்கிற உத்தரவை ரத்து செய்,

தி.மு.க. ஆட்சியில் 72000 ஒப்பந்த தொழிலாளர்கள் பணிநிரந்தரம் பெற்றார்கள். அதேபோல மின்வாரியத்தில் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்கள் அடையாளம் கண்டு பணி நிரந்தரம் செய்க.

கேங்மேன் தொழிலாளர்களை களப்பணி உதவியாளராக பதவி உயர்வு வழங்க,

விடுப்பட்ட கேங்மேன் தொழிலாளர்களுக்கு பணி வழங்கு.

மின்வாரியத்தில் காலிப்பணியிடங்களை உடனே நிரப்புக!

மின்வெட்டிற்கு பணியாளர்கள் மீது பழி போடாதே!

மீட்டர் குளறுபடிக்கு கணக்கீட்டு பணியாளர்கள் மீது பழி போடாதே!

மின்துறை அமைச்சரே களநிலவரத்தை ஆய்வு செய்து தீர்வு காண்க!

உள்ளிட்ட பல கோரிக்கைகளை வலியுறுத்தி த.வெ.க. அரசை எதிர்த்து, தமிழ்நாடு முழுவதும் தமிழ்நாடு மின்கழகத் தொமுசவினர் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள்.

இவ்வாறு மின்கழகத் தொ.மு.ச. பொதுச்செயலாளர் பா.மணிமாறன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

# மேன்மக்கள் மேன்மக்களே!

**"எந்தக்**
**கெட்ட வார்த்தையிலும்**

**நான் உணர்ந்ததில்லை**

**உங்கள் உடல் மொழியின்**
**அப்பட்டத்தை"**

**என்கிறார் கவிஞர்**
**பழ. புகழேந்தி!**

**வன்மத்தை வெளிப்படுத்த**

**தன் இழி குணத்தை எடுத்துக்காட்ட**

**எவருக்கும் சொற்கள்தாம்**
**பயன்படும்**

**என்று நினைத்திருந்தோம்!**

**பொய்யாக்கி விட்டார்கள்!**

**அசைவிலும், வளைவிலும், இசைவற்ற உடல்**
**மொழியிலும்,**
**ஏளனச் சிரிப்பிலும்**



**கூட,**

**தன்னை ஒருவரால் தயக்கமின்றி**
**அடையாளம் காட்ட முடிகிறது!**

**காயப்பட்டவர் கலங்கவே**
**இல்லை!**

**"சரிதான், நீங்கள் சொன்னது சரி**
**தான், என்னைத் தாடையில்**
**அடித்தார்கள் என்பது மெய்**
**தான்"**

**என்று சிரித்துக் கொண்டே சொன்னபோது**

**கேட்டவர் கண்கள் கலங்கின!**
**சொன்னவர் உயரம் கூடிற்று!**

**மேன்மக்கள் மேன்மக்களே!**



**சுப.வீரபாண்டியன்,**
திராவிட இயக்கத் தமிழர்
பேரவைத் தலைவர்